**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 130** **நாள்: 14.06.2025**

**சர்வதேச கழிப்பறை திருவிழா 3.0-வின் ஒரு அங்கமாக, கழிப்பறை நடைபயணம் இன்று திருவல்லிக்கேணி பகுதியில் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் வாஷ் லேப் (Washlab), சியர் (Cheer) மற்றும் ரீசைக்கிள் பின் (Recycle Bin) அமைப்புகள் இணைந்து 04.06.2025 அன்று நடத்திய சர்வதேச கழிப்பறை திருவிழா 3.0-வின் ஒரு அங்கமாக, கழிப்பறையை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிப்பது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கழிப்பறை நடைபயண விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று (14.06.2025) திருவல்லிக்கேணியில் நடைபெற்றது.

இந்த நடைபயணத்தில் உளவியலாளர் சண்ணுதி சுரேஷ், ஆராச்சியாளர் விஷ்ணு வேணுகோபால், நகரத்தின் பல பகுதிகளிலிருந்து பல்வேறு துறை சார்ந்தோர், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், வாஷ் லேப், சியர், ரீசைக்கிள் பின் அமைப்புகளை சார்ந்தவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த நடைபயணம் பொதுக் கழிப்பறைகளில் காணப்படும் சுவர் சித்திரங்கள், கிறுக்கல்கள் மற்றும் தகவல்களில் மூழ்கும் ஒரு தனித்துவமான அனுபவமாக இருந்தது. இந்நிகழ்வில் கழிப்பறையில் தனிநபரின் உளவியல் குறித்த நேரடி அனுபவங்கள் மற்றும் உணர்வுகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டு, பொதுக் கழிப்பறைகளை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பயன்படுத்தும் பொறுப்புணர்வு உள்ளிட்ட பல கருத்துரையாடல்கள் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**